# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 12.05.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். CP 4584/F/2024

Thiru.M.J.Jaseem Mohamed, -- புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
நகரமைப்பு அலுவலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
காஞ்சிபுரம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்-631 502.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் Thiru.M.J.Jaseem Mohamed, அவர்கள் ஆஜராகவில்லை. மேலும் மனுதாரர் 24.04.2026 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தான் ஹஜ்யாத்திரை மேற்கொள்ள இருப்பதால் தன்னால் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்றும், தனக்கு வேறொரு தேதி வழங்குமாறு ஆணையத்திடம் கோரியுள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.நா.பாஸ்கரன், மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-2, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், எண்.331/95, கோட்ராம்பாளையம் தெரு, காஞ்சிபுரம் மாவட்டம்-631 501 மற்றும் திரு.M.வெங்கடேசன், நகரமைப்பு அலுவலர் (பொ), காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகம், ஆகியோர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் 15.03.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், "Kindly furnish the copy of the documents / Applications submitted online to regularize or revise the plan to the Urban Development Department"

என்பன போன்ற தகவல்களை 2 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்/ அரசு சார்புச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை-9 அவர்கள் Letter No.7023861-UD-5(2)/2024-1, dated 22/03/2024 தேதியிட்ட கடிதத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர் / திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், 2வது 3வது, 4வது தளம், சிஎம்டிஏ வளாகம், ஈ&சி மார்கெட் சாலை, கோயம்பேடு, சென்னை-107 மற்றும் பொதுத் தகவல் அலுவலர், காஞ்சிபுரம் மாநகராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம்-631 502 ஆகியோர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். அம்மனுவைப் பெற்ற ஆணையாளர், காஞ்சிபுரம் மாநகராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் ந.க.எண்.2402/2024/எப்1, நாள் 22.04.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் வழங்காத காரணத்தால் 03.10.2024 தேதியிட்டு பிரிவு **18(1)**-ன் கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். இப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்கள் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலரால் ந.க.எண்.963/2024-காமா.2, நாள் 26.04.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும், மேல்முறையீட்டு அலுவலரால் ந.க.எண்.963/2024-கா.மா.2, நாள் 05.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றின் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது. இருப்பினும் மனுதாரர் 24.04.2026 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வழக்கின் விசாரணையை பிறிதொரு தேதிக்கு ஒத்திவைக்க கோரியதை ஆணையம் பரிசீலனை செய்து, இவ்வழக்கின் விசாரணையை 25.06.2026 அன்று ஒத்திவைக்கிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 4584/F/2024**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
நகரமைப்பு அலுவலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகம்,
காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்-631 502.

**<u>புகார்தாரர்</u>**

Thiru.M.J.Jaseem Mohamed,
பழைய எண்.121, புதிய எண்.247,
தம்புச்செட்டி தெரு, மண்ணடி,
சென்னை-600 001.

Copy to: File NS/PA-